**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்திய வானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

**(03.06.2026 முதல் 07.06.2026)**

**அறிக்கை எண் 18/2026** **தேதி. 02.06.2026**

## அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

அரியலூர் மாவட்டத்தின் 29.05.2026 முதல் 01.06.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 39 - 40 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 24 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 78 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 48 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 - 26 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் மேற்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை அரியலூர் (03.06.2026 முதல் 07.06.2026)

| கடந்த வார வானிலை (29.05.2026 முதல் 01.06.2026) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.06.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/05 | நாள்-2 30/05 | நாள்-3 31/05 | நாள்-4 01/06 | தேதி | நாள்-1 03/06 | நாள்-2 04/06 | நாள்-3 05/06 | நாள்-4 06/06 | நாள்-5 07/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 3 | 8 | 5 | 8 |
| 39 | 40 | 40 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 37 | 37 | 37 |
| 27 | 26 | 28 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 27 | 27 | 27 |
| 3 | 6 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 7 | 6 | 7 | 7 |
| 67 | 72 | 69 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 70 | 80 | 80 |
| 45 | 48 | 41 | 67 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 60 | 60 | 70 | 70 |
| 18 | 12 | 6 | 26 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 10 | 8 | 12 |
| மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 03.06.2026 முதல் 07.06.2026 ஆகிய தினங்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |

| | | |
|---|---|---|
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும் |
| நெல் | நடவு வயல் | நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை/ மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும். |
| தென்னை | | உகந்த வானிலை இருப்பதால் தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | வெய்யிலின் தாக்கத்தை குறைக்க மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடவும் |

**குறுஞ்செய்தி**

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**